## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 163/2024 |
| Deposition of Witness | : | PW– 1 |
| Name | : | தங்கமணி |
| Husband Name | : | சுப்பரமணி |
| Village | : | படியூர் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 32 |

A2 absent. A1 A3 present. 355 BNSS petition filed for Accused A2.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 03.11.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது படியூரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 11.04.2024 ஆம் தேதியன்று எங்கள் ஊர் திருவிழாவிற்கு நான் எனது வீட்டில் இருந்தபோது எனது உறவினரும் கொளுந்தனாருமான வலுப்புரசாமி வீட்டிற்கு வந்தபோது எனது கொளுந்தனாரின் மனைவி புவனேஸ்வரி என்பவருடன் ஆஜர் எதிரி சேதுபதி நேரில் பேசிக்கொண்டிருந்தபோது புவனேஸ்வரியின் கணவர் வலுப்புரசாமி ஏன் என் மனைவியிடம் பேசுகிறாய் என்று கேட்டதற்கு ஆஜர் எதிரி சேதுபதி வலுப்புரசாமியை பார்த்து நா அப்படித்தான்டா பேசுவேன் என்று சொல்லி வலுப்புரசாமியை அடித்துவிட்டதாக வலுப்புரசாமி என்னிடம் தகவல் சொன்னார். வலுப்புரசாமிக்கு தலையில் காயம் ஏற்பட்டதாக என்னிடம் சொன்னார். அதற்கு பின்னிட்டு ஆஜர் எதிரி மூவரும் எனது வீட்டிற்கு வந்து என்னை பார்த்து வாடி இங்க கண்டாரோழி, அவனுங்க எங்க போனாங்க, அவனுங்கள வெட்டாம விடமாட்டேன் என்று சொல்லி என்னை ஆஜர் எதிரிகள் அவர்களது கைகளால் நெஞ்சை தாக்கி, முதுகு மற்றும் கன்னத்தில் அடித்தார்கள். நான் கீழே விழுந்துவிட்டேன். பின்னர் பக்கத்து வீட்டு பையன் மூர்த்தி என்பவர் என்னை மருத்துவ சிகிச்சைக்காக காங்கேயம் அரசு மருத்துவமனையில் சேர்த்தார். பின்னிட்டு மேல் சிகிச்சைக்காக திருப்பூர் அரச மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். அங்கு நான் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தபோது காங்கேயம் போலீசார் என்னிடம் புகார் வாக்குமூலம் எழுதி கையொப்பம்

பெற்றுக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

திருப்பூர் அரசு மருத்துவமனையில் நான் வேலை செய்யும் நபர் என்றால் சரிதான். நாங்களும் ஆஜர் எதிரிகளும் ஒரே தெருவை சார்ந்தவர்கள். சம்பவத்தன்று கோவில் திருவிழா என்றால் சரிதான். எனது கொளுந்தனார் வலுப்புரான் நாங்கள் குடியிருந்த பகுதியில் குடியில்லாமல் வேறு பகுதியில் குடியிருந்தார் என்றால் சரிதான். சம்பவம் எங்கு நடந்தது என்று எனக்கு நேரில் தெரியாது. வலுப்புரான் சொல்லித்தான் தெரியும். சம்பவத்திற்கு முன்பாகவே வலுப்புரானும், புவனேஸ்வரியும் பிரிந்துவிட்டார்கள். புவனேஸ்வரி அவரது அம்மா வீட்டிற்கு சம்பவத்திற்கு 2 வருடங்களுக்கு முன்பாகவே சென்றுவிட்டார் என்றால் சரிதான். வலுப்புரான் என்பவர் சாந்தி என்பவரை கடந்த 2 வருடத்திற்கு முன்பாகவே திருமணம் செய்துகொண்டார் என்றால் சரிதான். அன்றைய தினம் ஊர்திருவிழா என்பதால் வலுப்புரான் என்பவர் மதுபோதையில் இருந்தார் என்றால் சரிதான்.அன்றைய தினம் இரண்டாவது எதிரியை வலுப்புரான் அடித்து மண்டை உடைந்து வலது கண் பக்கத்தில் காயம் ஏற்பட்டு தையல் போடப்பட்டிருந்தது என்றால் சரிதான். 11.04.2024 ஆம் தேதியன்று மாலை 4.00 மணிக்கு இச்சம்பவம் நடைபெற்றது என்றால் சரிதான். அன்றைய தினம் வலுப்புரானை 4.00 மணிக்கு பின்னிட்டு காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன் என்று சொன்னால் சரிதான். அதற்கு பின்னிட்டு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் இரவு 8 மணிக்கு எங்கள் வீட்டிற்கு ஆஜர் எதிரிகள் வந்தார்கள். எனக்கு எவ்வித வெளிப்புற காயமும் இல்லை என்றால் சரிதான். வலுப்புரான் என்பவர் சந்தேகத்தின் பேரில் எதிரிகளை தாக்கிவிட்டு அவர்களை காயப்படுததிவிட்டு பின்னிட்டு பின்யோசனையின் பேரில் திருப்பூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருப்பதை வைத்துக்கொண்டு மருத்துவ சிகிச்சைக்கு சேர அனுப்பிவைத்தேன் என்றும், பின்னிட்டு பின்யோசனையின் பேரில் என் மீதும் வழக்கு கொடுத்துவிடுவார் என்ற நோக்கத்தில் இரவு 8.00 மணிக்கு நடக்காத சம்பவத்தை நடந்ததாக சொல்லி காங்கேயம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்து எதிரிகள் மீது வழக்கு கொடுத்துளளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை தாக்கவும் வில்லை, எவ்வித

கெட்ட வார்த்தையும் பேசவில்லை, எவ்வித கொலைமிரட்டலும் விடுக்கவில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2025.11.03 18:49:12 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 163/2025 |
| Deposition of Witness | : | PW– 2 |
| Name | : | வலுப்புரசாமி |
| Father Name | : | குப்புச்சாமி |
| Village | : | படியூர் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 35 |

A2 absent. A1 A3 present. 355 BNSS petition filed for Accused A2.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 03.11.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது படியூரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 11.04.2024 ஆம் தேதியன்று எங்கள் ஊர் திருவிழா அன்று நான் எனது இருசக்கர வாகனத்தில் நின்றுகொண்டிருந்தபோது போது ஆஜர் எதிரி சேதுபதி என்பவர் என்னை சட்டையை பிடித்து அடித்து கீழே தள்ளிவிட்டார். தேவடியா பையனே என்று தகாத வார்த்தைகளை பேசி திட்டினார். அதன்பின்னிட்டு நான் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றுவிட்டேன். பின்னர் மேல் சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். நான் காங்கேயம் அரசு மருத்துவமனையில் இருந்தபோது எனது அண்ணன் என்னை பார்க்க காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு வந்தபோது அ.சா.1 எனது அண்ணன் சுப்பரமணிக்கு போன் செய்து சம்பவத்தை பற்றி கூறினார். நான் திருப்பூர் அரசு மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

கோவில் திருவிழாவிற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே நானும் எனது மனைவி புவனேஸ்வரியும் பிரிந்துவிட்டோம் என்றால் சரிதான். பின்னர் சாந்தி என்பவரை இரண்டாவதாக திருமணம் செய்துகொண்டேன் என்றால் சரிதான். நானும், எதிரிளும் ஒரே ஊர்க்காரர்கள் பங்காளி முறை உறவினர்

ஆவோம். நான் எனது இருசக்கர வாகனத்தில் நின்றுகொண்டிருந்தபோது என்னை ஆஜர் எதிரிகள் அடித்துவிட்டார்கள் என்று போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு சுமார் 6.30 மணிக்கு சிகிச்சைக்கு சேர்ந்துவிட்டேன். கனகராஜ் என்பவரை நான் அடித்ததில் மண்டை உடைந்து காயம் ஏற்பட்டுவிட்டது என்றால் இல்லை. அன்றைய தினம் புவனேஷ்வரி என்பவர் கோவில் விஷேசத்திற்கு திருவிழாவிற்கு வரவில்லை. நான் அன்றைய தினம் கோவில் விஷேசம் என்பதால் மதுபோதையில் இருந்தேனா என்றால் இருந்தேன். என்னை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர அனுப்பிவைத்தது எனது அண்ணி தங்கமணி ஆவார். எனக்கு வெளிப்புற காயம் எதுவும் இல்லை என்றால் சரிதான். நான்தான் மதுபோதையில் கனகராஜ் என்பவரை அடித்து மண்டையை உடைத்துவிட்டேன் என்றும், என் மீது வழக்கு வந்துவிடும் என்று நோக்கில் எனது அண்ணி தங்கமணி என்பவரின் ஆலோசனையின் பேரில் காங்கேயம் அரசு மருத்துமவனையில் சிகிச்சைக்கு சேர்ந்து எதிரிகள் மீது பொய் வழக்கு கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது முதல் மனைவி பிரிந்து சென்ற காரணத்தை வைத்துக்கொண்டு நான் மதுபோதையில் இருந்ததால் முதல் எதிரியின் தகப்பனாரை தாக்கிவிட்டு எதிரிகள் என்னை தாக்கியதாகவும், கெட்ட வார்த்தை பேசியதாகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2025.11.03 18:49:23 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 163/2024 |
| Deposition of Witness | : | PW– 3 |
| Name | : | குப்புசாமி |
| Father Name | : | அம்மாசை |
| Village | : | படியூர் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 65 |

A2 absent. A1 A3 present. 355 BNSS petition filed for Accused A2.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 03.11.2025

**<u>முதல் விசாரணை</u>**

நான் படியூரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 11.04.2024 ஆம் தேதியன்று வேலைக்கு சென்றுவிட்டு வந்த பின்னர் ஆஜர் எதிரிகள் என்னை கன்னத்தில் அடித்து கீழே தள்ளிவிட்டு தகாத வார்த்தைகளால் பேசினார்கள். பின்னர் நான் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். பின்னர் எனது மருமகளையும் அடித்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். நான் பின்னர் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு சேர்ந்து மேல் சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு சேர்ந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எங்கள் குடும்பத்திற்கும் எதிரியின் குடும்பத்திற்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கு கொடுப்பதற்கு முன்பாக வலுப்புரா சாமி புவேஸ்வரி என்பவரை பிரிந்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டது என்றால் சரிதான். வலுப்புரசாமிக்கும் எதிரிகளுக்கும் எங்கு பிரச்சனை ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் அந்த நேரத்தில் வேலைக்கு சென்றிருந்தேன். தங்கமணிக்கும் எதிரிக்கும் என்ன பிரச்சனை ஏற்பட்டது

என்று எனக்கு நேரில் தெரியாது என்றால் சரிதான். எதிரிகள் என்னை தாக்கவில்லை என்றும், எவ்வித கெட்ட வார்த்தைகளும் பேசிவில்லை என்று சொன்னால் சரியல்ல. தங்கமணியின் பரிந்துரையின்பேரில் மருத்துவ சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்றால் சரிதான். எனக்கு வெளிக்காயங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். வலுப்புரசாமி கனகராஜ் என்பவரை மண்டையை அடித்து உடைத்துவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2025.11.03 18:49:31 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 163/2024 |
| Deposition of Witness | : | PW– 4 |
| Name | : | மூர்த்தி |
| Father Name | : | சிவக்குமார் |
| Village | : | படியூர் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 25 |

A2 absent. A1 A3 present. 355 BNSS petition filed for Accused A2.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 03.11.2025

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது படியூரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 11.04.2024 ஆம் தேதியன்று நான் வேலைக்கு சென்விட்டு வரும்போது என் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள வலுப்புரசாமிக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் பிரச்சனை இருந்தது. ஆஜர் எதிரிகள் மூவரும் சேர்ந்து வலுப்புரசாமியை எங்கே என்று கேட்டு தங்கமணி வீட்டில் வந்து எதிகள் அவர்களது கைகளால் அவரை அடித்துவிட்டார்கள். பின்னர் தகாத வார்த்தைகளால் பேசினார்கள். அவர் கீழே விழுந்துவிட்டார். அடித்ததில் அவருக்கு நெஞ்சில் அடிபட்டிருந்தது. பின்னர் தங்கமணியையும் அவரது மாமனாரையும் நான் காங்கேயம் அரசு மருத்துமவனைக்கு சிகிச்சைக்கு அழைத்துவந்தேன். பின்னர் மேல் சிகிச்சைக்கு திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு செல்ல மருத்துவர்கள் பரிந்துரைத்தார்கள். அவர்கள் திருப்பூர் சென்றுவிட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

வலுப்புரசாமிக்கும், எதிரிகளுக்கும் என்ன பிரச்சனை ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அன்றைய தினம் நான் வேலைக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். தங்கமணிக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் என்ன பிரச்சனை ஏற்பட்டது என்று நேரடியாக தெரியாது

என்றால் சரிதான். வலுப்புரசாமி மதுபோதையில் இருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கனகராஜ் என்பவரை வலுப்புரான்சாமி அடித்து மண்டையை உடைத்துவிட்டார் என்ற தகவல் தெரியுமா என்றால் தெரியும். இச்சம்பவமானது இரவு 8.00 மணியளவில் நடைபெற்றது. சம்பவத்தை பற்றி நேரில் தெரியாது என்றும், அ.சா.1 எனது பக்கத்து வீட்டுக்காரர் என்பவர் அவர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2025.11.03 18:49:40 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 163/2024 |
| Deposition of Witness | : | PW- 5 |
| Name | : | பழனிச்சாமி |
| Father Name | : | அம்மாசை |
| Village | : | படியூர் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 49 |

A2 absent. A1 A3 present. 355 BNSS petition filed for Accused A2.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 03.11.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது படியூரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 11.04.2024 ஆம் தேதியன்று நான் வேலைக்கு சென்விட்டு வரும்போது என் வீட்டிற்கு பக்கத்தில் வலுப்புரசாமிக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் பிரச்சனை இருந்தது. ஆஜர் எதிரிகள் மூவரும் சேர்ந்து வலுப்புரசாமியை எங்கே என்று கேட்டு தங்கமணி வீட்டில் வந்து எதிகள் அவர்களது கைகளால் அவரை அடித்துவிட்டார்கள். அவர் கீழே விழுந்துவிட்டார். நான் விலக்கிவிட்டேன். அடித்ததில் அவருக்கு நெஞ்சில், கன்னத்தில் அடிபட்டிருந்தது. பின்னர் அவர்கள் மருத்துவமனைக்கு சென்றுவிட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

என்னை போலீசார் விசாரித்தார்களா என்றால் இல்லை. நான் தங்கமணியின் உறவினர் என்றால் சரிதான். எனது வீடும் அ.சா.1 யின் வீடும் பக்கம் பக்கம் வீடாகும். வலுப்புரசாமிக்கும் எதிரிகளுக்கும் என்ன பிரச்சனை ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. தங்கமணிக்கும் எதிரிகளுக்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. பின்னர் விசாரித்த வகையில்தான் தெரியும். கனகராஜ் என்பவருக்கு வலுப்புரசாமி தாக்கி மண்டை உடைந்து காயம் ஏற்பட்ட விசயம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வலுப்புரசாமிதான்

குடிபோதையில் சென்று எதிரிகளிடம் தகராறு செய்து இரண்டாவது எதிரியை காயம் படுத்திவிட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. அ.சா.1 யை எதிரிகள் எவ்வித கொட்ட வார்த்தையும் பேசவில்லை என்றும், எவ்வித தாக்குதலும் நடத்தவில்லை என்றும், அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2025.11.03 18:49:49 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 163/2024 |
| Deposition of Witness | : | PW- 6 |
| Name | : | சுப்பரமணி |
| Father Name | : | குப்புச்சாமி |
| Village | : | படியூர் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 36 |

A2 absent. A1 A3 present. 355 BNSS petition filed for Accused A2.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 03.11.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது படியூரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 11.04.2024 ஆம் தேதியன்று எனது தம்பிக்கும் வலுப்புரசாமிக்கும் பிரச்சனை ஏற்பட்டு எதிரிகள் எனது தம்பியை அடித்துவிட்டதாக கேள்விப்பட்டு நான் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். எதிரிகள் என்னை தேடிக்கொண்டு எனது வீட்டிற்கு சென்றபோது அங்கிருந்த எனது மனைவி தங்கமணியை எதிரிகள் அடித்துவிட்டார்கள். அடித்து கீழே தள்ளிவிட்டு தகாத வார்த்தைகளால் பேசினார்கள். பின்னர் பக்கத்து வீட்டுக்காரர் மூர்த்தி என்பவர் எனது மனைவியை காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துவந்தார். பின்னர் காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு சேர்ந்து மேல் சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு சேர்ந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

இச்சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கனகராஜ் என்பவரை வலுப்புரசாமி தாக்கி மண்டை உடைந்து காயம் ஏற்பட்ட விசயம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது தம்பி அன்றைய தினம் மதுபோதையில் இருந்தார் என்றால் திருவிழா என்பதால் மதுபோதையில் இருந்தார். சம்பவத்திற்கு முன்னிட்டு 2 ஆண்டுகளுக்கு முன்பே எனது தம்பி

அவரது மனைவியை விட்டு பிரிந்துவிட்டார் என்றால் சரிதான். சம்பவத்திற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே வேறு ஒரு திருமணம் செய்துகொண்டார் என்றால் சரிதான். எனது தம்பிதான் மதுபோதையில் திருவிழாவிற்கு வந்த கனகராஜ் என்பவரை அடித்து மண்டையை உடைத்துவிட்டார் என்றும், எனது மனைவி சொன்ன யோசனையின்பேரில் எதிரியின் மீது எனது மனைவி கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2025.11.03 18:49:59 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 163/2024 |
| Deposition of Witness | : | PW– 7 |
| Name | : | நாகராஜ் |
| Father Name | : | பழனிச்சாமி |
| Village | : | படியூர் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 24 |

A2 absent. A1 A3 present. 355 BNSS petition filed for Accused A2.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 03.11.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது படியூரில் குடியிருந்து வருகிறேன். சம்பவத்திற்கு அடுத்த நாள் 12.04.2024 காலை 11.00 மணியளவில் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் ஆஜர் எதிரிகள் தங்கமணி என்பவரை அடித்ததாக கேள்விப்பட்டது பற்றி விசாரித்தார்கள் போலீசார் என்னை விசாரித்தார்கள். அதில் சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள். அதில் நானும் என்னுடன் ராஜகுமார் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் தங்கமணியின் உறவினர் என்றால் சரிதான். நான் படியூர் பஞ்சாயத்து அலுவலகத்தில் வேலை செய்கிறேன் என்றால் சரிதான். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து எத்தனை படம் வரைந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நானும், ராஜ்குமார் என்பவரும் காங்கேயம் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துகொடுத்தோம் என்றால் சரியல்ல.

எனது உறவினர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2025.11.03 18:50:08 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்